# “செயலில் புலனைச் செலுத்துக”

## இனவாதத்தையும் பாகுபாட்டையும் ஒழிப்பதற்கான
## செயல் திட்டம்
## குறித்து சமூகத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடல் பற்றிய அறிக்கை

சுருக்கம்

**2002** நவம்பர்

Tamil

## முன்னுரை

பல்லினத் தன்மையே எமது மாநகரத்தின் அடிப்படைத் தன்மை. வேறுபாடுகளை ஏற்றுப் போற்றும் ஆற்றலை அது எமக்கு அளிக்கிறது. அந்த வகையில் எமது ரொறன்ரோ மாநகரத்தை அது வலுப்படுத்துகிறது. ரொறன்ரோவின் பல்லினத் தன்மை ஏற்றுக்கொள்ளப்படுவதன் பெறுபேறாகவே ஆக்கவளமும் பராமரிக்கும் இயல்பும் மிகுந்த உலக மாநகரங்களுள் ஒன்றாக அது ஓங்கி வருகிறது.

இது எமது மாநகரம் ஈட்டிய வெற்றி. எனினும் எமது மாநகர வாசிகளுள் பலர் மாநகர அலுவல்களில் முற்றுமுழுதாகப் பங்குபற்றுவதில்லை. அந்த நிலையை மாற்றுவதற்காக 2002 வைகாசி மாதம் ரொறன்ரோ வாசிகளுடன் நாம் கலந்துரையாடத் தொடங்கினோம். இனவாதத்தையும் பாகுபாட்டையும் ஒழிப்பதற்கென ரொறன்ரோ மாநகரம் வகுத்த செயல் திட்டம் குறித்து அவர்களுடன் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

1,000 பேருக்கு மேற்பட்டோர் கலந்துரையாடல்களிலும் மதியுரைக் குழுக் கூட்டங்களிலும் செயலணிக் கூட்டங்களிலும் தனியணிக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்கள், தமது கருத்தை எழுத்தில் முன்வைத்தார்கள், நேரில் வந்து உரை நிகழ்த்தினார்கள்.

கலந்துரையாடல்களில் நாம் செவிமடுத்த விடயங்கள் இந்த அறிக்கையில் சுருக்கி உரைக்கப்பட்டுள்ளன.

## இலக்கு

ஆட்கள் பலரும், அமைப்புகள் பலவும் கரிசனை காட்டும் விடயங்களுக்கிடையே ஒற்றுமை காணப்படுவதைத் தொடர்புக் குழு கண்டறிந்துள்ளது. மாநகரம் எந்த இலக்கை நோக்கி அதன் செயல் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும், எந்த நடவடிக்கைக்கு முதன்மை அளிக்க வேண்டும் என்பது குறித்து உடன்பாடான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## அரசியல் தலைமை

மாநகர வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் பல்லினத் தன்மையை ஏற்றுப் போற்றும் குறிக்கோளை எடுத்துரைத்து, அதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்கும் பணிக்குத் தலைமை ஏற்றல்.

பல்வேறு பிரிவினரும் ஒருவரை ஒருவர் எதிர்கொள்ளும் தறுவாயில் தத்தம் தனித்துவம், பால்படு சொல்லாட்சி, இனம், இயலாமை, பாலியல் நிலைப்பாடு உட்படப் பல காரணங்களால் பாகுபாட்டுக்கு உள்ளாகிறார்கள் என்பதை ஏற்கும் பாங்குடைய ஓர் அமைப்புக்குத் தலைமை வகித்தல்.

ஒரு நேரிய சமூகத்தை உருவாக்குவதற்கு ஏதுவான கொள்கையை வகுத்தல், வேலைவாய்ப்பு வழங்குதல், சேவைகள் அளித்தல், மானியம் வழங்குதல், ஒழுங்குபடுத்துதல், பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்தல். இவை மாநகரம் மேற்கொள்ளும் பல்வேறு பணிகளாகும்.

சமூகத்தைப் பேணுவதற்கு வேண்டிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்குதல். பாதிப்புக்கு உள்ளாகவல்ல தரப்பினரின் தேவைகளை நிறைவேற்றுதல்.

எல்லா விதமான பாகுபாடுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்த்துக் குரல் எழுப்புதல்.

## வாதாடுதல்

அரசுத் துறைகள், பிரிவுகள் அனைத்திடமும் சமூகத்தைப் பேணுவதற்கும் பொருளாதார வாழ்வில் பங்குபற்றுவதற்கும் உரிய சேவைகளை மேற்கொள்வதற்கும் வேண்டிய சட்ட திட்டங்களையும் பொருள்வசதியையும் நாடி வாதாடுதல்.

மாநகரத்தில் வாழும் பழங்குடி மக்களின் தனித்துவமான வரலாற்றையும் நிலைமையையும் தன்னாட்சி உரிமையையும் ஏற்றுப் போற்றுதல்.

பல்வேறு பிரிவினரும் ஒதுக்கப்பட்ட சமூகத்தவரும் எதிர்கொள்ளும் தடங்கல்கள் ஒழிக்கப்படுவதை ஆதரித்துக் குரல் எழுப்புதல். மேலதிக தடங்கல்கள் தோன்றுவதைத் தடுக்கப் பாடுபடுதல்.

ஏனைய தரப்புகளுடன் ஒத்துழைத்து அனைவரையும் உள்ளடக்கும் பாங்குடைய சமூகத்தை உருவாக்குதல்.

## பொருளாதார வாழ்வில் பங்குபற்றுதல்

அனைத்துச் சமூகங்களும் மாநகரத்தின் பொருளாதார வாழ்வில் முற்றுமுழுதாகப் பங்குபற்றுவதற்கு உதவுதல்.

அனைத்துச் சமூகங்களும் மாநகரத்தின் பொருளாதார வாழ்வில் பங்குபற்றுவதற்குப் போதிய உதவிகள் - இடவசதி, சிறுவர் பராமரிப்பு, எழுத்து வாசனை மற்றும் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல், போக்குவரத்து, கட்டுபடியாகத்தக்க வசிப்பிட வசதி உட்பட்ட உதவிகள் - கிடைக்கச்செய்தல்.

மாநகராட்சி மன்றத்தில் பல்வேறினத்து மக்களுக்கும் நியாயமான வேலைவாய்ப்பு அளிப்பதற்கு வேண்டிய திட்டங்களைச் செயற்படுத்தல்.

எமது மாநகரம் உலகப் பொருளாதார அரங்கில் பங்கு வகிப்பதற்கு ஏதுவாகப் பல்வேறு சமூகத்தவரும் தொண்டாற்றுவதற்கு உதவுதல்.

## மக்களுக்கு உணர்த்துதல் - விழிப்புணர்வு

பல்லினத் தன்மையைப் பேணுவதற்குத் திட்டவட்டமாக உறுதிபூணப்பட்டுள்ளதை எடுத்துரைத்தல்.

மாநகர சேவைகள், மாநகர மக்களின் உரிமைகள், கடப்பாடுகளை அவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் திட்டங்களையும் மேற்கொள்ளுதல்.

பல்வேறு சமூகங்களிடையேயும் உறவையும் புரிந்துணர்வையும் மதிப்பையும் மேம்படுத்தல்.

ரொறன்ரோ மாநகரத்தைக் கட்டியெழுப்புவதில் அனைத்துப் பிரிவினரும் ஆற்றிய தொண்டை ஆவணப்படுத்தி வெளியிடுதல்.

## சேவை வழங்கல்

பல்வேறின மக்களினதும் தேவைகளை நிறைவேற்றும் திட்டங்களையும் சேவைகளையும் மேற்கொண்டு, மாநகரவாசிகள் அனைவருக்கும் நியாயமான முறையில் நன்மைகள் கிடைக்கச்செய்தல்.

சேவை வழங்குவது தொடர்பான கொள்கைகளை வகுப்பதிலும் முதன்மை வாய்ந்த நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதிலும் சமூகத்தை ஈடுபடுத்தல்.

மாறிவரும் மக்களின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் சேவைகளை மேற்கொள்ளல்.

## வலுவான சமூகத்தைக் கட்டியெழுப்புதல்

அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் சமூகங்களின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தல்.

தலையெடுக்கும் சமூகங்களுக்கு நிதியொதுக்குவதன் மூலம் அவை நிலையூன்றிய சமூகங்களுடன் ஒருங்கிணைந்து மாநகர வாழ்வில் பங்குபற்றுவதற்கு வழிவகுத்தல்.

மாநகர வாசிகளின் எழுத்து வாசைன அறிவையும் ஆட்சிமொழி ஆற்றலையும் மேம்படுத்துவதன் மூலம் அவர்கள் சமூக வாழ்வில் பங்குபற்றி முன்னேறுவதற்கு வழிவகுத்தல்.

## பொறுப்புடைமை

மாநகராட்சி மன்றம் முடிபுகளை எடுக்கும் நடைமுறையில் சமூகம் பங்குபற்றுவதற்கான வழிவகைகளை வலுப்படுத்தல்.

சமூகங்களின் நிலைமையை உற்றுநோக்குவதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டு நம்பத்தகுந்த தரவுகளை வெளியிடுதல். இனவாதத்தையும் பாகுபாட்டையும் எதிர்ப்பதற்கான கொள்கைகளையும் செயல்முறைகளையும் வகுத்தல்.

செயல் திட்டம் செயற்படுவதை உற்றுநோக்கி மதிப்பிட்டு ஒழுங்காக அறிக்கை இடுவதற்கு வேண்டிய வழிமுறைகளையும் ஏற்பாடுகளையும் அறிகுறிகளையும் வகுத்தல்.

எங்களுடன் தொடர்புகொள்ளவும்:

முகவரி:
Plan of Action for the Elimination of Racism and Discrimination
c/o Diversity Management and Community Engagement,
Strategic and Corporate Policy/Healthy City Office,
Chief Administrator's Office,
City Hall, 11th Floor East,
100 Queen St. West, Toronto, ON
M5H 2N2

தொலைநகல்: 416-696-3645

மின்னஞ்சல்: diversity@toronto.ca

தொலைபேசி: 416-392-8592

தொலைத் தட்டெழுத்துப் பொறி: 416-392-0889

பன்மொழிச் சேவை: ரொறன்ரோ தகவல் சேவையை அழைக்கவும்: 416-338-0338

**"Report of the Community Consultations on the Plan of Action for the Elimination of Racism and Discrimination"** என்ற முழு அறிக்கையை ஆங்கிலத்திலும் பெரிய அச்சிலும் சாதாரண மொழியிலும் கணினி வட்டிலும் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்: **416-392-8592.**